THE TAMIL NADU DR.AMBEDKAR LAW UNIVERSITY
SCHOOL OF EXCELLENCE IN LAW
'Perungudi Campus', M.G.R. Salai, Perungudi, Chennai-600 113.
Telephone No. 044-22439051



Prof. (Dr.) V.Balaji, M.L.,Ph.D
DEAN

Lr. No.1151 /SOEL/S8/2021
22.11.2023

# CIRCULAR

**Sub:** The Tamil Nadu Dr.Ambedkar Law University - School of Excellence in Law – All the SC/ST/SCC Students Scholarship and Tuition Fee waiver for the Academic Year **2022-2023** – 'Tuition Fee' received from Government of Tamil Nadu to the Students' Bank Account – Request to remit the Amount to the University – Intimated - Reg.

**Ref:** 1. Lr.No.9122/Regr/Aca/A4/2022 dt.20.08.2022 received from the Registrar, TNDALU
2. This Office Circular No.1151/SOEL/S8/2021 dated 06.02.2023
3. Letter No.J4/7057/2019 dated 12.05.2023 received from the Director, Adi Dravidar Welfare Department, Chennai – 600 005

*******

It is informed that in the reference 3rd cited, the Government of Tamil Nadu have sanctioned the **'Tuition Fee' Amount** to the Students belonging to **SC(O), SC(A), ST and SC (Converted Christian) Community**, directly to their Registered Bank Account connected with the Adhaar Card No.

In this regard, the students who have received the **'Scholarship' (Tuition Fee)** has to be remitted to **'The Registrar, Tamil Nadu Dr.Ambedkar Law University, Chennai by way of Demand Draft along with a letter** and submit the same to the respective Course Counter of the Office of the U.G. and P.G. Degree Programmes, **on or before 08.12.2023,** without fail.

DEAN

To
1. All the Course Directors and Year Faculty of SOEL, TNDALU – for intimating all the Students
2. Notice Boards – Perungudi Campus
3. The Director, P.G. Degree Programmes, TNDALU, Chennai – 113.

Copy to:
1. The P.S. to VC for placing before the Hon'ble Vice-Chancellor for kind information.
2. The Registrar for kind information.
3. The Librarian to upload in the university website.

திரு.த.ஆனந்த், இ.ஆ.ப.,
இயக்குநர்

ஆதிதிராவிடர் நலத்துறை
சென்னை-05.

23 MAY 2023
1917

ந.க.எண் ஜே4/ 7057 /2019, நாள். 12.05.2023.

அன்பார்ந்த திரு.நாராயணப்பெருமாள்

பொருள் : ஆதிதிராவிடர் நலம் – கல்வி உதவித்தொகை அனைத்து அரசு / அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் ஆதி திராவிடர் / கிறித்துவ மதம் மாறிய மாணாக்கர்களுக்கு கற்பிப்புக் கட்டணம் இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க அறிவுறுத்த கோருதல் – தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண்.722 சமூக நலத்துறை, நாள். 13.10.1977.
2. அரசாணை (ப) எண்.41 ஆதிமபந (ஆதிந 3) துறை, நாள். 02.03.2021.
3. இவ்வலுவலக ந.க.எண். ஜே4/ 7057 /2019 , நாள். 06.02.2023.

----

பார்வையில் கண்டுள்ள அரசாணை மற்றும் கடிதங்களின்பால் தங்கள் கவனத்தை ஈர்க்க விழைகிறேன்.

பார்வை 1-இல் காணும் அரசாணையின்படி, அரசு /அரசு உதவிப்பெறும் கல்லூரிகள்/பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர்களுக்கு கல்லூரிக்கு செலுத்த வேண்டிய கற்பிப்புக்கட்டணத்தை மாணாக்கர்கள் சார்பாக இத்துறை மூலம் கல்லூரிகளுக்கு கற்பிப்பு கட்டணம் ஈடுசெய்து வழங்கப்பட்டுவந்தது.

பார்வை 2-ல் காணும் அரசாணையில் அரசு /அரசு உதவிப்பெறும் கல்லூரிகள்/பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் ஆதிதிராவிடர்,

பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர்களுக்கு கல்லூரிக்கு செலுத்த வேண்டிய கற்பிப்புக்கட்டண விவரங்களை 2021-2022 கல்வியாண்டு முதல் இணையதளம் வாயிலாக பெற்று புதிய நடைமுறைப்படி தகுதியான மாணாக்கர்களுக்கு வங்கிக் கணக்கில் வரவு வைக்க ஆணையிடப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணையினை 2021-2022 கல்வியாண்டில் Covid 19 நோய்த்தொற்று தீவிரம் காரணமாகவும், கல்வி உதவித்தொகை இணையப் பயன்பாட்டில் பல்வேறு அரசுத் துறைகளுடன் ஆலோசனை மேற்கொண்டு. பல்வேறு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்ததன் காரணமாகவும் நிலையில் குறித்த காலத்திற்குள், கல்வி உதவித்தொகை இணையதளத்தில் மாற்றங்கள் செய்ய இயலாததன் காரணமாக, 2022-23 ஆம் கல்வியாண்டு முதல் இணையவழி விண்ணப்பிக்க வழிவகைசெய்யப்பட்டது.

பார்வை 3-ல் காணும் இவ்வலுவலக கடிதம் மூலமாக அரசு /அரசு உதவிப்பெறும் கல்லூரிகள்/பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர்களுக்கு கல்லூரிக்கு செலுத்த வேண்டிய கற்பிப்புக்கட்டண விவரங்களை 2022-23 ஆம் கல்வியாண்டிற்கு http://tnadtwscholarship.tn.gov.in என்ற இணைதளம் வாயிலாக பார்வை 2-ல் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணையில் தெரிவிக்கப்பட்ட புதிய நடைமுறைகளை பின்பற்றி இணையவழியில் மாணவர்களே விண்ணப்பிக்க அறிவுறுத்துமாறு அனைத்து அரசு/ அரசு உதவிபெறும் பல்கலைக்கழகங்களையும், சம்பந்தப்பட்ட துறைதலைவர்களையும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

எனினும் ஒரு சில கல்வி நிறுவனங்கள் மட்டுமே மேற்கண்ட புதிய நடைமுறைகளை பின்பற்றியுள்ளது தெரியவருகிறது. சில கல்வி நிறுவனங்கள் அரசாணையை பின்பற்றவில்லை என தெரியவருகின்றது. எனவே, பார்வை 2-ல் குறிப்பிடப்பட்ட அரசாணை நகல் தற்போது மீண்டும் இணைத்து அனுப்பப்படுகிறது. கல்வி நிறுவனங்கள் அளவிலும் மாணவர்கள் அளவிலும் 2023-24 ஆம் கல்வியாண்டிற்கு கல்வி உதவித்தொகை பெற பின்பற்றபட வேண்டிய நடைமுறைகள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. மேற்கண்ட நடைமுறைகளை பின்பற்றி மாணவர்களே விண்ணப்பிக்க அறிவுறுத்துமாறும், 2022-2023 ஆம் கல்வியாண்டில் மேற்கண்ட விவரங்களை பின்பற்றாத கல்வி நிறுவனங்கள் மாணவர்கள் விவரங்களை இவ்வலுவலகத்திற்கு அனுப்பவும் தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,

26/7

(த.[illegible]ந்த்)

இணைப்பு :- மேற்சொன்னவாறு

பெறுநர்.

பேராசிரியர் டாக்டர் எஸ்.நாராயணப்பெருமாள்
இயக்குநர், சட்ட கல்வி இயக்ககம்,
புரசைவாக்கம், சென்னை -600 010

மாணவர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்:-

1. அரசு /அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் அனைத்து ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணாக்கர்கள் வருமான வரம்பு ஏதுமின்றி http: //tnadtwscholarship.tn.gov.in என்ற இணைய தளத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

2. ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சம் குறைவான மாணவர்களுக்கு கற்பிப்புக் கட்டணம் அவர்களது போஸ்ட்மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் மாணவரது வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும்.

3. ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சம் மேலுள்ள மாணவர்களுக்கு கற்பிப்புக் கட்டணம் சலுகை திட்டத்தின் கீழ் மாணவரது வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும்.

4. மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் விண்ணப்பிக்க மாணவர்களின் சாதிச்சான்று மற்றும் வருமானச்சான்று ஆகியவை இணைய வழியில் பெறபட்டதாக இருக்க வேண்டும்.

5. மாணவர்கள் கல்வி உதவித்தொகை பெற தமது வங்கி கணக்கில் ஆதார் எண்ணை இணைத்திருக்க வேண்டும்.

6. மாணவர்கள் தங்களது கணக்கில் கற்பிப்புக்கட்டணம் வரவு வைக்கப்பட்டவுடன் ஏழுநாட்களுக்குள் அதனை கல்வி நிறுவனத்திற்கு செலுத்தவேண்டும்.

**கல்வி நிறுவனங்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்:-**

1. தங்கள் கல்வி நிறுவனத்தில் பயிலும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணாக்கர்கள் மாணவர்கள் அனைவரும் மேற்குறிப்பிட்ட **இணையதளத்தில்** (http: //tnadtwscholarship.tn.gov.in ) புதிய நடைமுறைகளை பின்பற்றி கல்வி உதவித்தொகை வேண்டி விண்ணப்பித்துள்ளதை உறுதி செய்ய வேண்டும்.

2. கல்வி நிறுவனத்தில் உள்ள பாடப்பிரிவுகளின் கட்டண விவரங்களை மேற்குறிப்பிட்ட இணையதளம் துவக்கப்பட்டவுடன் பதிவேற்றம் செய்து அந்தந்த மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்களுக்கு சமர்ப்பித்து ஒப்புதல் பெறுவதை உறுதி செய்ய வேண்டும்.

3. மாணாக்கர்களின் சாதிச்சான்று, வருமானச்சான்றிதழின் நகல் மற்றும் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட வங்கி கணக்கு விவரங்களை பெற்று வைத்திருக்க வேண்டும்.

4. மாணவர்கள் வங்கி கணக்கில் கற்பிப்புக்கட்டணம் வரவு வைக்கப்பட்ட நாளிலிருந்து ஏழுநாட்களுக்குள் அதனை கல்வி நிறுவனத்திற்கு செலுத்த இசைவு தெரிவிக்கும் சுயஉறுதிச் சான்றினை பெற்று வைத்துக்கொள்ளவேண்டும்.

ஒம்/- த. ஆனந்த்.,
ஆதிதிராவிடர் நல இயக்குநர்.

ஆதிதிராவிடர் நல இயக்குநருக்காக.

09 MAR 2021

## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – கல்வி கட்டணச் சலுகைகள் – அரசு பல்கலைக்கழகம் / அரசு கல்லூரி / அரசு உதவிப்பெறும் கல்லூரிகளில் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர்களுக்கு கற்பிப்புக் கட்டண விவரங்களை இணையவழியில் பெற்று புதிய நடைமுறைப்படி தகுதியான மாணாக்கர்களுக்கு 2021–2022 கல்வியாண்டு முதல் அவர்களுடைய வங்கிக் கணக்கில் வரவு வைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந–3) துறை

அரசாணை (ப) எண். 41

நாள்: 02.03.2021
சார்வரி வருடம் மாசி 18,
திருவள்ளுவர் ஆண்டு 2052
படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண்.722, சமுக நலத்துறை, நாள் 13.10.1977.
2. ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடித ந.க. எண். ஜே4/7057/2019, நாள்.15.04.2019 , 24.12.2020 மற்றும் 08.02.2021

------

ஆணை :–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கல்லூரிகளில் (P.U.C. படிப்பிற்கு மேற்பட்ட படிப்புகளுக்கு) பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்களுக்கு அவர்களது பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானத்தை கணக்கில் கொள்ளாமல் கற்பிப்பு கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்து ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், இந்த ஆணையினை பின்பற்றி அரசு / அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்களுக்கு மட்டும் கற்பிப்பு கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசு / அரசு உதவிப்பெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் SC/ST/SCC மாணாக்கர்களுக்கான கற்பிப்புக் கட்டணத்தை பின்வரும் காரணங்களினால் புதிய நடைமுறைப்படி இணைய வழியில் மாணாக்கர்களின் வங்கி கணக்கில் செலுத்துவதற்கு ஆணை வழங்குமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்:–

I. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் மொத்த மாணாக்கர்களில் 99% சதவீத மாணாக்கர்களின் பெற்றோர் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சம் ரூபாய்க்கு குறைவான ஆண்டு வருமானம் கொண்டவர்களாக உள்ளனர். 1% சதவீதத்திற்கும் குறைவான மாணாக்கர்கள் மட்டுமே குடும்ப வருமானம் ரூ.2.50 இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்டதாக இருப்பர்.

II. இத்திட்டத்தினை இணையவழியில் செயல்படுத்துவதன் மூலம் 99% சதவீத மாணாக்கர்கள் சார்ந்த கற்பிப்புக்கட்டண தொகை மத்திய அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழும், 1% சதவீத மாணாக்கர்கள் மட்டுமே மாநில அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் பயன்பெறுவர், இதனால் மாநில அரசிற்கு நிதி சேமிப்பு ஏற்படும்.

III. போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் இணைய வழியில் ஏற்கனவே மாணாக்கர்களின் விவரங்கள் பெறப்பட்டுள்ளதால் இத்திட்டம் இணைய வழியில் செயல்படுத்துவதில் சிரமம் ஏதுமில்லை.

IV. கற்பிப்புக் கட்டணங்களை இணைய வழியில் செயல்படுத்துவதன் மூலம் அரசு / அரசு உதவிப்பெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணாக்கர்களின் கல்வி கட்டணம் அந்தந்த கல்வியாண்டுகளிலேயே வழங்குவதால் மாணாக்கர்கள் அவர்களின் கல்வியில் முழு கவனம் செலுத்த பேருதவியான அமையும்.

<u>புதிய நடைமுறை</u>

University approved Fee Structure

⇩

DADWO Approved

⇩

All fees include Tuition fee Maintenance

Allowance go to Student account

3. ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துருவினை, அரசு கவனமுடன் பரிசிலனை செய்து அதனை ஏற்று 2021–2022 ஆம் கல்வியாண்டு முதல், அரசு பல்கலைக்கழகம் / அரசு கல்லூரி / அரசு உதவிப்பெறும் கல்லூரிகளில் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர்களுக்கு கற்பிப்புக் கட்டண விவரங்களை மேற்காணும் புதிய நடைமுறைப் படி இணையவழியில் பெற்று தகுதியான மாணாக்கர்களுக்கு அவர்களுடைய வங்கி கணக்கில் செலுத்திடவும் மற்றும் இணையவழி மென்பொருளில் தேவையான மாற்றம் செய்திடவும் ஆதிதிராவிடர் நல ஆணையருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சாரா எண். 30427/நிதித் (ஆதி(ம)பந) துறை/ 2020, நாள்.07.12.2020–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஷம்பு கல்லோலிகர்,
அரசு முதன்மைச் செயலாளர். (முகூபொ)

பெறுநர்:–
ஆணையர், ஆதிதிராவிடர் நலம்,
சென்னை–600 005.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–600 005.